1971 ஜூலை 12]

பற்றி நிர்வாகச் சீர்திருத்தக் குழுவினிடத்தில் கருத்துரை கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் ஆராய்ந்தறிந்து தக்க முடிவுகள் எடுத்த பிறகுதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, யூனியனில் வேலை செய்பவர்களை யூனியன் ஸ்டாப் என்றும், கவர்ன்மெண்ட் ஸ்டாப் என்றும் இரண்டு பிரிவு களாகப் பிரித்து பாகுபாடு செய்யப்படுகிறது. எல்லோரையும் கவர்ன் மெண்ட் ஸ்டாப் என்ற அளவில் ஒரே சீராகக் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எல்லோ ரையும் ஒரே நிலையில் கொண்டுவர முடியாது. உள்ளாட்சித் துறை தனியாக இருக்கிறது. அதில் பல வகையான நிர்வாக சீர்திருத்தங்கள் செய்யலாமா என்பதைக் குறித்து ஆராய நிர்வாக சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டிருக் கிறது. எல்லோரையும் ஒரே துறையில் கொண்டு வருவது என்பது சரியாக இருக்காது. உள்ளாட்சித் துறை பல்வேறு அரசாங்கத் துறைகளோடு தொடர்பு கொண்டுதான் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் எடுத்து விட்டால் பின்னர் உள்ளாட்சித் துறை என்று தனியாக இருக்க முடியாது.

மங்கலத்திலுள்ள மருத்துவ மனை

*** 196 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மங்கலத்திலுள்ள மருத்துவமனை மூடப்பட்டு விட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) ஆம்;

(இ) மங்கலத்தில் உள்ள நாட்டு மருத்துவமனையில் பணிபுரிய எந்த மருத்துவரும் முன் வாராததால், அம் மருத்துவமனை மூடப்பட்டது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே அங்கே இருக்கிற மக்களுக்கு மருத்துவ வசதி வேண்டுமென்றால், அவர்கள் 7 மைல் தூரத்திலுள்ள திருப்பூருக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. இந்தக் குறையைப் போக்கு கின்ற முறையில் எம்.பி.பி.எஸ் பட்டம் பெற்ற டாக்டர் ஒருவரை அங்கே போட அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது நாட்டு மருத்துவமனையாக இருந்து வந்தது. ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு மொத்த ஊதியம் என்று வழங்கப்படுகிற நிலையிலிருந்தது. இந்தக் காரணத்தால் பணி புரிய யாரும் வாராததால் மருத்துவமனை மூடப்பட்டது. திருப்பூர் பஞ்சாயத்து யூனியன் சார்பாக 1½ ஆண்டுக்கு முன்னாலே நாட்டு மருத்துவ மனையை, நவீன மருத்துவமனையாக, ரூரல் டிஸ்பென்சரியாக, மாடர்ன் டிஸ் பென்சரியாக மாற்றியமைக்க வேண்டும் என்று கோரிக்கை அனுப்பப்பட்டது. புதிய நவீன மருத்துவமனையாக ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்திருக் கிறார்கள். அதற்குப் பக்கத்தில் பொங்கலூர் பஞ்சாயத்து யூனியனிலிருந்து ஒரு மருத்துவரை மருத்துவம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டு, அவரும்

ஒப்புக்கொண்டிருக்கிறார். அதற்கு அரசாங்கத்தின் சம்மதம் கேட்டு எழுதி யனுப்பப்பட்டிருக்கிறது. அரசாங்கம் அதை பரிசிலனை செய்து, சம்பந்தப் பட்ட வேறு இலாகாவுக்கு எழுதியனுப்பும்படி கேட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, விரைவிலே பஞ்சாயத்து யூனியன் நடத்த ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம்.

மதுக்கரை ஏ.சி.சி. சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் புகை

*197 வினா.—**திரு. என். மருதாசலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயமுத்தூர், மதுக்கரை ஏ.சி.சி. சிமெண்ட் தொழிற்சாலையில் பெரிய அளவில் வெளிப்படுகின்ற புகையை நவீன பில்டர் முறையை பயன்படுத்தி கட்டுப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, சிமெண்ட் தொழிற்சாலையில் வெளியாகின்ற புகையினால் சுற்றுவட்டாரத்தில் ஐந்து மைல் விஸ்தீரணத் திற்கு புல்பூண்டுகள்கூட முளைப்பதில்லை. மேலும் பக்கத்தில் இருக்கிற கிராமங்களிலுள்ள மக்களுக்கு சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன. ஆகவே, புகையைக் கட்டுப்படுத்தி, உள்ளே இழுத்துக்கொள்கிற வகையில் நவீன பில்டர்களை உபயோகிக்க வேண்டுமென்று ஆலை முதலாளிக்கு அரசாங்கம் உத்தரவிடுமா? அப்படிச் செய்தால்தான் பக்கத்தில் இருக்கிற கிராமங்களி லுள்ள மக்களுக்கு சௌகரியம் ஏற்படும் என்பதை உணர்ந்து அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த சிமெண்ட் தொழிற்சாலை தமிழகத்தில் ஏற்பட்ட மிகப் பழைய தொழிற்சாலைகளில் ஒன்றாகும். அதனுடைய புகை போகின்ற அமைப்பை மாற்றியமைக்க நவீன முறையில் 'எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிபிடேட்டர்ஸ்' என்ற சாதனம் அதற்காக அமைக்கப்பட வேண்டும். அந்த சாதனத்தைப் பொருத்த வேண்டு மென்றால், அதை வெளிநாட்டிலிருந்துதான் வரவழைக்க வேண்டும்; அல்லது அந்த சாதனத்தின் பெரும்பகுதி வரவழைக்கப்பட்டு, உள்நாட்டுச் சாதனங்களோடு பொருத்தியமைக்க வேண்டும். வெளிநாடுகளிலிருந்து அந்தச் சாதனத்தையோ, அதன் மற்ற பாகங்களையோ வரவழைக்க வேண்டுமென்றால், அதற்கு அந்நிய நாட்டுச் செலாவணி செலவழிக்க வேண்டியிருக்கும். அதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி வேண்டும். மத்திய அரசாங்கம் இதை ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. Dust control by water spraying and other mechanical devices like chain screens and canvas bags' என்ற முறையில் கேன்வாஸ் பைப்புகளின் மூலம், சங்கிலிகளால் ஆன screens முறைகளால் தண்ணீரை தெளிக்கின்ற ஸ்பேரேயிங் மூலமாக செய்தால் புகையினால் வருகின்ற தூசிகள் தடுக்கப்படுகின்றன. அப்படித் தடுக்கின்ற முயற்சிகளை "Assistant Director in-charge of Industrial Hygiene" தொழில் துறையிலே சுகாதாரத்தைக் கவனிக்கின்ற துணை இயக்குநர் அவர்கள் அவ்வப்போது கவனித்து வருகிறார்கள். இந்த அளவிற்குத்தான் அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது, நிறைவேற்ற முடிகிறது.